[திரு. துரைமுருகன்]

சார் மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களுக்கு அனுமதி அளித்தீர்கள். பேசும்பொழுது பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். எங்களுக்கு மட்டும் அனுமதி கிடையாதா? நாங்கள் சொல்வதையும் முழுவதும் கேட்டுக் கொள்ளுங்களேன். எனவே நான் சொல்கிறேன் **

நாங்கள் நிரூபிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வாதங்களை எல்லாம் 6 மணிக்கு மேலே வைத்துக் கொள்ளுங்கள் **

என்ற வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம். (குறுக்கீடு) திரு. ரகுமான்கான் அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால்தான் நீக்கப்படும். இல்லையென்றால் நீக்க வேண்டிய பிரச்சினையே இல்லை.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப் பெறுகிறது.

3. தகவல் கோரல்.

உரிமைப் பிரச்சினைக்கு விளக்கம் தருவது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

[முற்பகல் 10—10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான், நீங்கள் உட்காருங்கள். அன்றைக்கு நீங்கள் இடத்தில் இல்லாதது தால் பதிலை எழுதி கடிதம் மூலம் அனுப்புங்கள் என்று சொன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

னேன். உங்கள் பதிலை அனுப்புங்கள். என் அனுமதியின்றி விவாதத்திற்குரிய பிரச்சினையாக அதை இன்றைக்கு ஆக்காதீர்கள். நான் அதை அனுமதிப்பதற்கில்லை. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : உரிமைப் பிரச்சினைமீது விளக்கம் தர எனக்கு வாய்ப்பளிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பதிலை முதலில் எழுத்து மூலமாகக் கொடுங்கள். பிறகு பார்க்கலாம். அன்றைக்கு தங்களைக் கூப்பிட்டபோது தாங்கள் அவையில் இல்லை. இன்றைக்கு அது பற்றி பேச முடியாது. பேசினால் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. துரை முருகன் : வெரி இம்பார்ட்டன்ட் பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்கவில்லை. (கூச்சல் குழப்பம்)

டாக்டர் மு. கருணாநிதி : ஒருவர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி அதைத் தாங்கள் அனுமதித்து அந்த ஒழுங்குப் பிரச்சினையை அவர் எடுத்துச் சொன்ன பிறகு அது ஒழுங்குப் பிரச்சினையா இல்லையா என்றுசொல்கிற அதிகாரமும் உரிமையும் படைத்தவர் தாங்கள். இங்கே நண்பர் சமரசம் அவர்கள் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதையொட்டி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதைத் தாங்கள் அனுமதித்தீர்கள். அவர்கள் சொன்ன பிறகு அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொன்னீர்கள். அதே போல் திரு. துரை முருகன் அவர்களும் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். அது என்ன என்று தாங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். திரு. துரை முருகன் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். இந்த மூன்று பாயின்ட் ஆப் ஆர்டர்களையும் நான் அனுமதித்தேன். திரும்பவும் நான்காவது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வரும்போதுதான் அனுமதி மறுத்தேன்.

நான் எப்படி சபையை நடத்துவது? பத்து நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு 'திங்கிங்' (Thinking) வந்தால், அதை நான் அனுமதிக்க முடியுமா? அவர் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டார். உடனே அனுமதித்தேன். சமரசம் அவர்கள் பேசியதில் துரை முருகனுக்கு உணர்ச்சி வருமென்று தான் அவரை அனுமதித்தேன். திரும்பத்திரும்ப உணர்ச்சி வந்தால், அதை நான் எப்படி அனுமதிப்பது?

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துரை முருகன் இங்கே எழுப்பியதாகக் கருதியது, கூற முன்வந்தது தங்களுடைய செயலாளரிடமிருந்து வந்த ஒரு கடிதத்தைப் பற்றியது. அதற்குத் தாங்கள் அவரைக் கேட்டுத் தீர்ப்பளித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கடிதத்தைப் பற்றி என் அறையிலே பேசலாம். அப்படிப் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தக் கடிதத்தைப் பற்றி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கொண்டு வர வேண்டாம். கொண்டுவர வேண்டிய நெசசிடி இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரும்போது, தாங்களோ அல்லது அலுவல் ஆய்வுக் குழுவில் நாங்களோ பேசுகின்ற நேரத்தில் அவை முன்னவர் அவர்கள் இப்படிப்பட்ட யோசனையைச் சொல்லி, எதிர்க் கட்சி வரிசையில் இருக்கின்ற நாங்களும் யோசனை சொல்லி, பட்ஜெட்மீது பொது விவாதம் நடைபெறுகின்ற போது எல்லாவற்றையும் பற்றிப் பேசலாம் என்பதால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று சொல்லப்பட்டது. அப்போதுகூட, மிக அத்தியாவசியமான, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்து கொள்வது இந்த அவையின் மரபாக இருந்து வருகிறது. ஆனால், சங்கரன்கோயிலில் நடைபெற்ற ஒரு பெரிய அமளியைக் குறித்து துரை முருகன் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது, காவல் துறை மானியம் வரும்போது பேசிக் கொள்ளலாம் என்று பதில் அனுப்பப்பட்டது. காவல் துறை மானியம் எப்போது வருமென்று தெரியாது. அதன் தேதி பல தடவைகள் மாற்றப்பட்டிருக்கிறது ; அடுத்த மாதம் வருவதாக இருக்கிறது. இப்படி 5, 6 தடவைகள் தேதி மாற்றப்பட்டிருக்கிறது. அதனால், இந்தத் தீர்மானம் மானியம் வருகிறவரையில் காத்திருக்க முடியாது என்பதால், இந்தத் தீர்மானம் எழுப்பப்படுகிறது. அதைத் தாங்கள் நாளையோ அல்லது நாளைய மறுநாளோ எடுத்துக் கொள்ளலாம் என்பது என் வேண்டுகோள். (குறுக்கீடு)

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பக்கங்களிலிருந்து நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. உட்காருங்கள். ஒரு ஒழுங்குப் பிரச்சினையில் எவ்வித விவாதத்தையும் அனுமதிக்க இயலாது. ஒரு பிரச்சினையை விவாதிக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 3 பேர்களுக்கு, ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதித்தேன். திரும்பத் திரும்ப ஒழுங்குப் பிரச்சினை வரும்பொழுதுதான் வேண்டாம் என்று சொன்னேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். விஷயம் என்னவென்றால், என் அறையிலே வந்து சொல்வதில் ஆட்சேபணை இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பதைவிட என்னிடம் தனியாக வந்து கேட்கலாம். முந்தாநாள்கூட என். வி. என். சோமு அவர்கள் ஒரு பிரச்சினை விவாதிக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில், இன்றைக்கு எடுத்துக் கொண்டோம். ரகுமான்கான் அவர்களைப் பேச அனுமதிக்கவில்லையா ? பதில் வந்தால், அனுமதிக்கிறேன். எனக்கு அதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை முடிந்துபோய்விட்டது. விளக்கம் வேண்டாம். திரும்பவும் ஏதாவது பிரச்சினை வரும். ஏதாவது யோசனை இருந்தால், என் அறைக்கு வந்து சொல்லுங்கள்.

[முற்பகல் 10-20]

4. கவன ஈர்ப்புகள்

(அ) கீழக்கரை மீனவர்கள் நிலை

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,

'' 8—4—1981 அன்று கீழக்கரை மீனவர்கள் மீது நடந்த தாக்குதல் குறித்த''. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 8—4—1981-ல் எவ்வித அசம்பாவிதமும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், கீழக்கரையைச் சார்ந்த திரு. முகமது இப்ராகிம் ஷாவின் மகன் முத்து முனியன் என்பவர் 5—4—1981 நாளன்று இரவு 7-30 மணி சுமாருக்கு மண்டபம் காவல் துறை நிலையத்தில் புகார் மனு ஒன்று கொடுத்து இருக்கிறார். அதில், தன்னை சீனியப்பா தர்கா எனும் இடத்தில் 4—4—1981 அன்று இரவு சுமார் 11·00 மணிக்கு நெடுமரைக்